**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8066945

1. District : மாவட்டம் கடலூர் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 7/2019 Date: நாள் 04.06.2019

2. (i) Act சட்டம்: Criminal Procedure Code, 1973 Sections பிரிவுகள்: 102
(ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended by The Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 30.05.2019 15.55 hrs Date to : நாள் வரை 30.05.2019 22.00 hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.05.2019 Time : நேரம் 1200 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - III Time : நேரம் 1230 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 60 கி.மீ. தெற்கு
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி சார் பதிவாளர் அலுவலகம், கம்மாபுரம், விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் --------------

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் பா.இரத்னாவதி
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பெ.பாண்டிநாடார்,
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது 56
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் துணை ஆய்வுக்குழு அலுவலர்
(g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர் மாவட்ட ஆட்சியரகம், கடலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

த.அன்புராஜா, உதவியாளர், சார் பதிவாளர் (பொறுப்பு), கம்மாபுரம் சார் பதிவு அலுவலகம், விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.</u>

இன்று 04.06.2019 ந்தேதி மாலை 17.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, பா.இரத்னாவதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர் மாவட்ட ஆட்சியரகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ்க்கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு, அனுப்புநர் பா.இரத்னாவதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர் மாவட்ட ஆட்சியரகம், கடலூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். பொருள் : திடீர் ஆய்வு சோதனை – சார் பதிவாளர் அலுவலகம்,

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
04/06/19

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 4.6.19
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 18 மணி

Name: பெயர் ....[illegible]....
Rank: நிலை ஆய்வாளர் No. எண் .........
ஊ.த.க.பிரிவு
கடலூர்.

கம்மாபுரம், விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம் – திடீர் ஆய்வு சோதனை – உரிய சரியான முகாந்திரம் இன்றி கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் – திடீர் ஆய்வு மகஜரில் கைப்பற்றுதல் – ஒப்படைப்பு – நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் – சம்மந்தமாக. கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் மாவட்ட ஆட்சியரகம், கடலூர், துணை ஆய்வுக்குழு அலுவலரான பா.இரத்னாவதி ஆகிய நான் கடந்த 30.05.2019ந்தேதி எனது அலுவலகத்தில் இருந்தபோது, எனக்கு கிடைத்த தகவலின்படி கடலூர் மாவட்டம், கம்மாபுரம் சார்பதிவக அலுவலகத்தில் கம்மாபுரத்தில் உள்ள ஆவண எழுத்தர்கள் 30.05.2019ந்தேதி கம்மாபுரம் சார்பதிவகம், பிரிவு உதவியாளர் பொறுப்பு சார்பதிவாளர், கம்மாபுரம் சார்பதிவகம் திரு.த.அன்புராஜா என்பவரை சந்தித்து ஆவணங்கள் பதிவு செய்வதற்காகவும், திருமண பதிவிற்காகவும் மற்றும் இதர பதிவுகளுக்காகவும் லஞ்சமாக பணம் கொடுக்க போவதாக கிடைக்க பெற்ற ரகசிய தகவலை பெற்று, உடனடியாக நான் புறப்பட்டு எங்களது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு சுமார் 12.00 மணிக்கு வந்து அங்கு பணியில் இருந்த ஆய்வாளர் D.சண்முகம் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேலும் எனது தலைமையில் மேற்படி கம்மாபுரம் சார்பதிவகம் அலுவலகத்திற்கு மாலை சுமார் 16.00 மணிக்கு மேல் சென்றால் அங்கு ஆவண எழுத்தர்கள் கம்மாபுரம் சார்பதிவகத்தில் பத்திர பதிவிற்கு கொடுக்க உள்ள பணத்தை திடீர் ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், ஆய்வாளர் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், ஆய்வாளர் சண்முகம் மற்றும் அவரது காவல் குழுவினர்களும் மாலை சுமார் 14.00 மணிக்கு இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு விருத்தாசலம் – சிதம்பரம் சாலையில் உள்ள கம்மாபுரம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சற்று வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் கம்மாபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தை கண்காணித்து பின்னர் சுமார் 15.55 மணிக்கு தெற்கு பார்த்து அமைந்து இருக்கும் கம்மாபுரம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். அப்போது என்னுடன் வந்த ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளரையும் அவரது காவல் குழுவினரையும் கண்ட சிலர் பயந்து கொண்டு

அலுவலகத்தை விட்டு ஓட தொடங்கினர். அப்போது ஆய்வாளர் அலுவலகத்தின் முகப்பு வாசல் கேட்டை மூட முயற்சி செய்தபோது, அங்கிருந்து ஒருசில நபர்கள் ஆய்வாளரின் கட்டுப்பாட்டை மீறி வாயிற்படி படிக்கட்டில் விழுந்து புரண்டு அலுவலகத்தை விட்டு வெளியே ஓட முயற்சி செய்தனர். ஆய்வாளர் அவரது காவல் பார்ட்டி சகிதம் அவர்களை வளைத்து பிடித்து விசாரித்தபோது அவர்களது பெயர் 1.அர்ச்சுனன் (வயது 38) த/பெ. நாகப்பன், நெ.143, மேலத் தெரு, க.புத்தூர் என தெரிவித்தார். மேலும், அவர் கம்மாபுரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவணங்கள் புதிவு செய்ய உரிமம் பெற்ற ஆவண எழுத்தர் ராஜதுரை என்பவரிடம் உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். 2) S.சுரேஷ் (30), த/பெ சந்திரமோகன், க.புத்தூர், சாத்தபாடி அஞ்சல், விருத்தாசலம் தாலுக்கா 3) R.ராமலிங்கம் (73), த/பெ. ராஜகண்ணு, நெ.285, மருவன்கோயில், பேர்பெரியான்குப்பம், பண்ருட்டி தாலுக்கா, கடலூர் மாவட்டம், 4) R.பாண்டியன் (33), த/பெ. ராமலிங்கம், நெ.285, மருவன்கோயில், பேர்பெரியான்குப்பம், பண்ருட்டி தாலுக்கா, கடலூர் மாவட்டம் எனவும் தெரியவந்தது. மேலும், பத்திரம் பதிவு செய்வதற்காக சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார்கள். பின்னர், ஆய்வாளர் கம்மாபுரம் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பயந்து ஓடி வெளியே வந்தவர்களை, அலுவலகத்தின் முன்புற ஹாலில் உட்கார வைத்துவிட்டு, பாதுகாப்பிற்கு காவலர்களை நியமித்தார். நானும், ஆய்வாளரும் மற்றும் இதர காவல் குழுவினரும் மெயின் ஹாலில் கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த நபருக்கு பின்புற சுவற்றில் சார்பதிவாளர் என ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருந்ததை கவணித்தோம். அந்த நபரிடம் என்னையும், ஆய்வாளரையும் மற்றும் ஆய்வு குழுவினரையும் அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் அவரை பற்றி விசாரித்த போது தனது பெயர் த.அன்புராஜா, வயது 34, த/பெ தட்சிணாமூர்த்தி, உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், கம்மாபுரம், என்றும் தற்போது கம்மாபுரம் சார்பதிவாளர் பணியிடம் காலியாக உள்ளது என்றும், மேற்படி சார்பதிவாளர் பணியிடத்தை கூடுதல் பொறுப்பாக கடந்த 27.07.2018 முதல் கவனித்து வருவதாகவும், கதவு எண்.39, தெற்கு தெரு, நந்தீஸ்வரமங்கலம், திருமுட்டம் வட்டம், கடலூர் மாவட்டம் என்ற முகவரியில் வசித்து வருவதாகவும் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை, உதவியாளர் (சார்பதிவாளர் பொறுப்பு) திரு. அன்புராஜா அவர்கள் முன்னிலையிலேயே ஆய்வு செய்ய போகும்

விவரத்தை தெரிவித்தேன். மேலும் சோதனையை துவக்குவதற்கு முன்னர், குழுவில் இடம் பெற்றிருந்த அனைவரும் அவரது முன்னிலையில் சுய சோதனை செய்து குழுவினரிடம் பொருளோ, பணமோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டோம். மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திலுள்ள, சுமார் 20 x 20 அடி நீள அகலமுள்ள வரவேற்பறையும் அந்த அறைக்கு மேல்புறம் சுமார் 10 x 20 அடி நீள அகலமுள்ள கண்ணாடி கணினி அறை உள்ளது. கணினி அறைக்கு வடபுறம் சுமார் 40 x 20 அடி நீள அகலமுள்ள பிரதான ஹால் உள்ளது. அந்த ஹாலுக்கு மேற்கு புறம் ஆவணங்கள் வைப்பறை சுமார் 50 x 20 அடி நீள அகலமுள்ள ஆவணங்கள் வைப்பறையும் உள்ளது. ஹாலிற்கு கீழ்புறம் சுமார் 10 x 8 அடி நீள அகலமுள்ள Scan கண்ணாடி அறை, அதற்கு எதிர்புறம் சுமார் 5 x 8 அடி நீள அகலமுள்ள ஸ்டோர் ரூம் உள்ளது. அதற்கு வடபுறம் கழிவறை மற்றும் குளியலறை அமைக்கப்பட்டுள்ளது. ஹாலின் மேற்கு புறம் சார் பதிவாளருக்கான மர மேடை அமைக்கப்பட்டுள்ளது. மேடையின்மீது இருந்த நாற்காலியில் கிழக்கு பார்த்து பொறுப்பு சார்பதிவாளர் அமர்ந்திருந்தார். அதற்கு எதிர்புறம் உதவியாளருக்கான இருக்கை உள்ளது. பின்னர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகளை கேட்டுப்பெற்று பார்க்க 1) வருகை பதிவேடு (பக்கம் 1 முதல் 68 வரை), 2) தனி நபர் பண இருப்பு பதிவேடு (பக்கம் 1 முதல் 48 வரை), 3) அ கணக்கு பதிவேடு (01.02.2019 முதல் 30.05.2019 வரை பதிவுகள் உள்ளது) 4) H கணக்கு பதிவேடு (பக்கம் 1 முதல் 99 வரை) 5) வெளியூர் அஞ்சல் பதிவேடு (01.01.2019 முதல் 30.05.2019 வரை) 6) இயக்கப்பதிவேடு (02.02.2019 வரை 22.05.2019 வரை பதிவுகள் உள்ளது) 7) நிகழ்ச்சி குறிப்பு பதிவேடு 8) Pending document register (30.12.2011 முதல் 30.05.2019 வரை பதிவு உள்ளது. 30.05.2019 தேதியில் மொத்தம் unclimed document-8, pending document-3 என்று கணப்பட்டது). மேலும், சார்பதிவாளரின் பேஜை மீது இருந்த ஆவணங்களை சோதனை செய்து பார்த்ததில் ஆவண எண்கள்.635/2019, 771/2018, 634/2018, 76/2017, 497/2017, Book III 15/2017, 634/2019, 645/2019, 1439/2016, 106/2017, Book-III 6/2017, 213/2017, 660/2017 ஆகிய அசல் ஆவணங்கள் இருந்தது தெரியவந்தது. அதுபற்றி கேட்க இந்த ஆவணங்களுக்கு உரிய பதிவு பொதுமக்களுக்கு வழங்கப்படாமல் உள்ளது என

தெரிவித்தார். காரணம் கேட்க அவரால் சரியான விளக்கம் அளிக்க முடியவில்லை. எனவே, மேற்கூறிய அசல் ஆவணங்கள் தொடர்பாக விவர குறிப்புகள் அடங்கிய சான்று அவரிடம் கையொப்பமிட்டு பெறப்பட்டது. அசல் ஆவணங்கள் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆவணங்களின் சான்றிட்ட நகல் பெறப்பட்டது. மேலும் P11/2014, P20/2015 இந்த இரண்டு ஆவணங்களும் மாவட்ட பதிவாளர், விருத்தாசலம் அவர்களிடம் உள்ளது. P13/2019 புல தணிக்கை முடித்து சாப்ட்வேர் பிராப்ளம் உள்ளதால் நிலுவையில் உள்ளது. மேற்கண்ட மூன்று ஆவணங்களுக்கும் சான்று நகல் எதுவும் பெறவில்லை. Account A கணக்கு முதல் F கணக்கு, குறுந்தகடுகணக்கு, Section 41, 42 சான்று கணக்கு மற்ற இதர கணக்குகள் அனைத்தும் 30.05.2019ந்தேதிக்கு பதிவேடு மற்றும் கணிணியை ஒப்பிட்டு பார்க்க இரண்டும் சரியாக இருந்தது. அதற்குரிய கனிணி பிரிண்ட் அவுட் எடுத்து ஆஜர் செய்தார். பின்னர் நான், ஆய்வாளர் சண்முகம், பொறுப்பு சார்பதிவாளர் திரு.அன்புராஜா மற்றும் காவல் குழுவினருடன் அலுவலக ஹாலில் 1) சார்பதிவாளர் இருக்கைக்கு எதிர்புறமுள்ள உள்ள கழிவறைக்கு நேர் எதிரே உள்ள ஸ்டோர் ரூமில் வைக்கப்பட்டிருந்த ஆவணங்களை சோதனை செய்து பார்க்க ரூ.37,500/– ஆவணங்கள் அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க (1) 2000 x 15 = 30000/- (2) 500 x 10 = 5,000/- (3) 200 x 10 = 2,000/-, (4) 100 x 5 = 500/- ஆக மொத்தம் ரூ.37,500/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த பொறுப்பு சார்பதிவாளர் அன்புராஜாவிடம் விவரம் கேட்க, இந்த பணம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். 2) அலுவலகத்தில் உள்ள ஹாலில் சார்பதிவாளர் இருக்கைக்கு வடபுறமும் இருந்த சுமார் 8 அடி உயரமுள்ள இரும்பு பீரோவினுள்ள உள்ள நான்கு அடுக்குகளில் இரண்டாவது அடுக்கில் இருந்த ஆவணங்களுக்கு அடியில் சோதனை செய்து பார்க்க ரூ.12,540/– ஆவணங்கள் அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க (1)2000 x 4 = 8000/- (2) 500 x 4 = 2,000/- (3) 200 x 10 = 2,000/- , (4) 100 x 5 = 500/- (5)10 x 4 = 40/- ஆக மொத்தம் ரூ.12,540/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த பொறுப்பு சார்பதிவாளர்

அன்புராஜாவிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். 3) சார் பதிவாளர் இருக்கையின் பின்புறமுள்ள ஆவண வைப்பறையில் இரண்டாவதாக இருந்த இரும்பு ரேக்கினை சோதனை செய்து பார்க்க ரூ.24,000/– ஆவணங்கள் அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க (1) 500 x 40 = 20,000/- (2) 200 x 20 = 4,000/-ஆக மொத்தம் ரூ.24,000/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த பொறுப்பு சார்பதிவாளர் அன்புராஜாவிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். 4) சார் பதிவாளர் இருக்கைக்கு வலது புறமுள்ள கணினி அறையில் உள்ள இரண்டாவது கணினியில் மர டேபிள் டிராயரில் 28,500/– வைக்கப்பட்டிருந்தது. மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க (1) 2000 x 8 = 16,000/–, (2) 500 x 8 = 4,000/- (3) 200 x 33 = 6,600/-, (4) 100 x 14 = 1400/- (5) 50 x 7 = 350, (6) 20 x 3 = 60, (7) 10 x 9 = 90/- ஆக மொத்தம் ரூ.28,500/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த பொறுப்பு சார்பதிவாளர் அன்புராஜாவிடம் விவரம் கேட்க, இந்த பணம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். மேலும், மேற்சொன்ன சோதனையில் கைப்பற்றப்பட்ட பணத்திற்கு சரியான முகாந்திரம், சார்பதிவாளர் அன்புராஜா தெரிவிக்காததால் மேற்படி பணம் மொத்தம் ரூ.1,02,540/– பத்திரபதிவு அலுவலகத்தில் பதிவு நடவடிக்கைக்காக லஞ்சமாக பெறப்பட்டிருக்கலாம் என கருதி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி கைப்பற்றினேன். சோதனையின்போது சார்பதிவாளர் அலுவலகத்தினுள் கேமரா ஆப்பரேட்டராக பணியில் இருந்த எழிலரசன் (24), த/பெ, கலைமணி, எண்.22, மேற்கு தெரு, க.புத்தூர், சாத்தப்பாடி அஞ்சல், விருத்தாசலம் தாலுக்கா, மற்றும் ஸ்கேன் ஆப்பரேட்டராக பணியில் இருந்த சொக்கலிங்கம் (34), த/பெ, ராமச்சந்திரன், எண்.109, மேல தெரு, தேவன்குடி, திருமுட்டம் தாலுக்கா ஆகியோர் பணியில் இருந்தனர். இவர்களைப் பற்றி விசாரிக்க முறையே Outsourcing அடிப்படையில் TCS மற்றும் 9 star கம்பெனியின் மூலம் ஊதியம் பெற்று பணிபுரிவதாக சொன்னார்கள். மேலும் அலுவலகத்தினுள் 1) வச்சரவேல் (48), த/பெ, சுப்பரமணியன், எண்.378, வடக்கு தெரு, கம்மாபுரம் என்பவர் சார் பதிவாளர் அலுவலகத்தினுள் பத்திர

பதிவு சம்மந்தமாக வந்ததாக தெரிவித்தார். அவரிடம் விசாரிக்க தான் உரிமம் பெற்ற பத்திர பதிவு எழுத்தர் எனவும், உரிமம் எண். B/869/CDM/1991 என தெரியவந்தது. மேலும், அலுவலகத்தினுள் பத்திரபதிவிற்கு வந்திருந்த நபர்களின் உறவினர்கள் இருந்தனர். அவர்களை விசாரித்து அலுவலகத்தைவிட்டு வெளியே அனுப்பிவைக்கப்பட்டது. மேற்சொன்ன ஆய்வின்போது கணக்கில் வராத, சார்பதிவாளரால் உரிய காரணம் தெரிவிக்காத பணத்தை மட்டும் கைப்பற்றப்பட்டது. மேற்கண்ட சோதனையின்போது மொத்தம் ரூ.1,02,540/– கைப்பற்றப்பட்டது. மேலும், 1) வருகை பதிவேடு (பக்கம் 1 முதல் 68 வரை), 2) தனி நபர் பண இருப்பு பதிவேடு (பக்கம் 1 முதல் 48 வரை), 3) A கணக்கு பதிவேடு (01.02.2019 முதல் 30.05.2019 வரை பதிவுகள் உள்ளது) 4) H கணக்கு பதிவேடு (பக்கம் 1 முதல் 99 வரை) 5) வெளியூர் அஞ்சல் பதிவேடு (01.01.2019 முதல் 30.05.2019 வரை) 6) இயக்கப்பதிவேடு (02.02.2019 வரை 22.05.2019 வரை பதிவுகள் உள்ளது) 7) நிகழ்ச்சி குறிப்பு பதிவேடு 8) Pending document register (30.12.2011 முதல் 30.05.2019 வரை பதிவு உள்ளது) ஆகிய பதிவேடுகள் மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜர் மாலை 16.00 மணி முதல் இரவு 22.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும் சோதனையின்போது என்னாலோ, என்னுடன் வந்த கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் மற்றும் அவர்களது குழுவினராலோ மேற்படி அலுவலகத்தில் எனது தலைமையில் ஆய்வு குழு சோதனை செய்தபோது எந்தவித ஆவணங்களையோ, பொருட்களையோ சேதப்படுத்தவில்லை. மேலும் எங்களது மேற்படி ஆய்வின்போது அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளவில்லை. தொடர்ந்து மறுநாள் 31.05.2019ந்தேதி காலையில் எனக்கு கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டி விழுப்புரம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு சென்று, அலுவலக அலுவலர்களுடன் கூட்டாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 01.06.2019 மற்றும் 02.06.2019 ஆகிய இரண்டு நாட்கள் வார விடுமுறை தினங்களாக இருந்தபடியாலும், 03.06.2019 ந்தேதி அவசர அலுவலாக மாவட்டத்தில் உத்தரவுப்படி ஆய்வு மேற்கொள்ளப்பட்டபடியால், இன்று 04.06.2019ந்தேதி மாலை 17.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம்

வந்து, 30.05.2019ந்தேதி கம்மாபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி திடீர் ஆய்வு சம்மந்தமாக சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டி, திடீர் ஆய்வின்போது தயார் செய்யப்பட்ட அசல் திடீர் ஆய்வு மகஜர், ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,02,540/–, திடீர் ஆய்வு மகஜரில் குறிப்பிட்டுள்ள கைப்பற்றப்பட்ட ஆவணங்களை இத்துடன் இணைத்து உரிய நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்படுகிறது. மேலும் இது சம்மந்தமாக பதிவு செய்யும் வழக்கின் விவரம் பின்னர் தெரியப்படுத்துமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள (பா.இரத்னாவதி), துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், மாவட்ட ஆட்சியரகம், கடலூர். அய்யா, நான் இன்று 04.06.2019 மாலை 17.00 மணிக்கு மேலே கண்ட புகார் மனுவை பெற்று, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7/2019, சட்டபிரிவு 102 குற்றவியல் நடைமுறை சட்டம், உடன் இணைந்த சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988 மற்றும் ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதன் அசல் நகலையும், வாதியின் புகார் மனுவையும், வழக்கின் சொத்தையும் இணைத்து தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, கடலூர் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து அனுப்பப்படுகிறது.

(S. கண்ணன்)
காவல் ஆய்வாளர்,
ஊதக பிரிவு
கடலூர்.